சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–07.01.2021

## அவசரக்கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் மார்கழி மாதம் 23–ஆம் நாள் (ஜனவரி திங்கள் 07–ஆம் நாள்:–07.01.2021) வியாழன் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

## பொருள் எண்.1

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை (பல்வகை) எண்.1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-3(2)) துறை, நாள்.06.01.2021ன்படி குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.144.00 இலட்சம் (6 பணிகள்) மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.56.00 இலட்சம் (2 பணிகள்) ஆக மொத்தம் 8 பணிகள் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2020–21–இன் கீழ் முழு மான்யத்துடன் கீழ்க்கண்ட விவரப்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | No's | Estimate Amount Rs. in Lakhs |
|---|---|---|---|
| 1 | Construction of 1.00 LL Capacity Over Head Tank at Keelapulananthapuram | 1 | 29.50 |
| 2 | Construction of 1.00 LL Capacity Over Head Tank at Pallikottaipatti | 1 | 29.50 |
| 3 | Supply, Delivery, Laying and Jointing of Pumping Main at Chinnamanur Bus Stand to Keelapulananthapuram OHT in Chinnamanur Municipality | 3.00 Km | 60.50 |
| 4 | Supply, Delivery, Laying and Jointing of Distribution main at Annamalai Nagar to Lakshmi Nagar and Pasumpon Nagar, Pallikottaipatti in Chinnamanur Municipality | 1 | 19.50 |
| 5 | Supply, Delivery and jointing of of 20HP Motor (Openwell) submersible motor Ward No.3, Samykulam Pumping Main at Water Treatment Plant in Chinnamanur Municipality. | 1 | 2.50 |
| 6 | Supply, Delivery and jointing of of 20HP Motor (Openwell) submersible motor Ward No.27, Pallikottaipatti Pumping Main at Water Treatment Plant in Chinnamanur Municipality. | 1 | 2.50 |
| 7 | Construction of Storm Water Drain at Gandhi Nagar Colony in Chinnamanur Municipality | 2.000 Km | 28.50 |
| 8 | Construction of Storm Water Drain at Min Nagar to Petchiamman Koil road in Chinnamanur Municipality | 0.250 Km | 27.50 |
| | **Grand Total** | **8** | **200.00** |

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.2380/2018/இ1)**

**தீர்மான எண், நாள்** **185, நாள்.07.01.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சியில் தினசரி 13 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகின்றன. அதில் தரம் பிரிக்கப்பட்ட 9.00 மெட்ரிக் டன் அளவிலான மக்கும் குப்பைகள் (Bio degradable Waste) நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 2 எண்ணிக்கையிலான பசுமை உரக்குடில் (Micro Composting Centre) மற்றும் 7 எண்ணிக்கையிலான சிறிய வகை உரக்குடில்கள் மூலமாக (Onsite Composting centre) கையாளப்பட்டு உரமாக்கப்படுகின்றன. இதுதவிர சுமார் 4 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகள் மறு சுழற்சி அடிப்படையில் பயன்படுத்தத்தக்க உலர் கழிவுகள் (Recyclable dry waste) பிரித்தெடுக்கப்பட்டு மறு சுழற்சி செய்வதற்காக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், மறு சுழற்சிக்கு பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Recyclable Dry Waste and Non Saleable Dry Waste) உத்தேசமாக 6 மெட்ரிக் டன் அளவுள்ள உலர் கழிவுகள் எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டி M/s. Ultratech / M/s. Dalmia, சிமெண்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான சிமெண்ட் ஆலைக்கு அனுப்ப தயாராக உள்ளது. மேற்படி நகராட்சியால் அனுப்பப்பட்டுவரும் குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்த இயலாதவை, ஈரமாக உள்ளது மற்றும் மேற்படி உலர் கழிவுகளை சரியாக தரம் பிரிக்கப்படவில்லை உள்ளிட்ட இதர காரணஙகளை தெரிவித்து சிமெண்ட் ஆலை வாஙக மறுக்கும் நிலையில் மறுபடியும் குப்பைக் கிடஙகிலேயே மீண்டும் சேகரம் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது தவிர நகரை விட்டு வெகு தூரத்தில் அமைந்துள்ள மேற்படி தனியார் சிமெண்ட் ஆலைகளுக்கு பயன்படுத்த இயலாத விற்பனை செய்ய இயலாத உலர் கழிவுகளை கொண்டு செல்ல லாரி வாடகையாக ஒரு டன்னுக்கு சுமார் ரூ.5000/– வரை செலவிட நேர்வதால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகின்றது. மேற்படி பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non-Usable and Non Saleable Dry Waste) உலர் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு கொண்டு சென்று எரியூட்டுவதற்குப் பதிலாக நகராட்சி மூலம் புதிதாக எரியூட்டும் உலை நிறுவி மேற்படி குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் கையாள ( Dry Waste Incinerator) வேண்டிய நிலை உள்ளது. மேலும், இத்திட்டத்னை செயல்படுத்த கூடுதல் தொகை செலவிட நேரிடும் என்பதால் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த இந்நகராட்சியையொட்டி அமைந்துள்ள கம்பம் மற்றும் கூடலூர் நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளையும் சேர்த்து கையாள புதிதாக தினசரி 20 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) அமைக்கவும் மேற்படி திட்டத்தினை தனியார் பஙகளிப்பு (Public Private) பகுதியில் செயல்படுத்தவும் அதற்கான திட்ட மதிப்பீடு **ரூ.250.00** இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் செலவினத்தை கீழ்க்கண்ட வகையில் இத்திட்டதின் கீழ் பஙகெடுத்துக்கொள்ளும் நகராட்சிகள் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நகராட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு இலட்சத்தில் | பஙகுத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | சின்னமனூர் | ரூ.250.00 | 75.00 |
| 2 | கம்பம் | | 100.00 |
| 3 | கூடலூர் (தேனி) | | 75.00 |
| **மொத்தம்** | | | **250.00** |

மேலும், மேற்படி எரியூட்டு உலை நிறுவி உலையை இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை சின்னமனூர் நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும், மேற்படி மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை விகிதாச்சார முறையில் பகிர்ந்து செலுத்தி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மேற்படி திட்டத்தினை மத்திய அரசின் 15–வது நிதிக்குழு மான்ய தொகையிலிருந்து செயல்படுத்தவும் சின்னமனூர், கம்பம் மற்றும் கூடலூர்

நகராட்சிகள் விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிரிந்து கொள்ளவும், தொடர் பராமரிப்பினை தனியார் மூலம் சின்னமனூர் நகராட்சி கண்காணிப்பில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண், நாள்** **186, நாள்.07.01.2021**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.3

சின்னமனூர் நகராட்சியில் 15ம் மத்திய நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரிலான பினை மான்யத்திட்டத்தின் கீழ் (Tied Grant) முதல் மற்றும் 2–ஆம் உத்தேச மான்யத்தில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020ம் நாளிட்ட ந.க.20452/2020/எல்ஏ2 எண் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட வழிக்காட்டு நெறிமுறைகளை பின்பற்றி 2020–2021–ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | வேலையின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 20 குதிரைவேக திறன் கொண்ட சென்ட்ரிபியூகல் மோட்டார்கள் 2 எண்ணத்தினை மாற்றி புதுப்பிக்கும் பணி மற்றும் ஸ்கீரினிங் அமைப்பினை மாற்றி அமைத்தல் | ரூ.10.00 |
| 2. | கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Grit Chamber and Motor மாற்றி புதுப்பிக்கும் பணி | ரூ.9.50 |
| 3. | 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மினி ஜெட்ராடிங் வாகனம் வாங்கும் பணி | ரூ.18.00 |
| 4. | சிறிய கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பு மற்றும் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு சின்ன வாய்க்காலுக்கு செல்ல சாக்கடை கட்டும் பணி | ரூ.10.00 |
| 5. | குடிநீர் விநியோகப் பணிக்கு சுத்திகரிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு பிரிவினை புதுப்பிக்கும் பணி | ரூ.10.00 |
| 6. | வார்டு எண்.6,7,13 மற்றும் 14–இல் பகிர்மானக் குழாய்கள் அமைக்கும் பணி | ரூ.10.00 |

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர்ப் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட தொகையினை 15ம் மத்திய நிதிக்குழு மான்யத் திட்டத்தின் கீழ் விடுவிக்க வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ளலாம்.**

**தீர்மான எண், நாள்** **187, நாள்.07.01.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.1 மற்றும் 2 கீழப்பூலானந்தபுரம் மற்றும் கண்ணம்மாள் கார்டன் பகுதியில் மொத்தம் 2250 குடியிருப்புகள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்களுக்கு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 90 mm பிவிசி நீர் உந்தும் குழாய்கள் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி PVC pipe–கள் அமைத்து சுமார் 30 வருடங்களுக்கு மேல் ஆனதாலும், தேனி–குமுளி நெடுஞ்சாலை வழியாக செல்வதாலும் அடிக்கடி பைப் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுவதால், 90mm PVC Pipe முழுவதையும் மாற்றி புதியதாக 150mm DI Pipe–ஆக அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.60.50 இலட்சம் ஆகும். இப்பணியினை செய்ய உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதி 2020–21–இன் கீழ் வரப்பெற்ற அரசாணை (பல்வகை) எண்.01, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-3(2)) துறை, நாள்.06.01.2021 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம்.**

**தீர்மான எண், நாள்** **188, நாள்.07.01.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளில் உள்ள 12511 வீட்டு குடியிருப்புகள் 1781க்கு மேற்பட்ட வணிக நிறுவனங்கள், பள்ளிகள், அரசு அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் அன்றாடம் 13 மெட்ரிக் டன் அளவு குப்பை சேகரிக்கப்பட்டு மேற்படி குப்பைகள் வார்டு எண்.27, அய்யனார்புரம் பகுதியில் உள்ள வண்ணான்கரடு பகுதியில் கொட்டப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி குப்பை கிடங்கில் குப்பைகள் முழுமையாக நிரம்பிவிட்டது. எனவே நகர்ப்பகுதியில் சேகரம் ஆகும் குப்பைகளை அகற்றுவதில் தாமதம் ஏற்படுகிறது. எனவே பொது மக்களின் நலன் மற்றும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி வருடம் முழுவதும் தேவைப்படும் போது குப்பைகளை ஜே.சி.பி இயந்திரம் மூலம் அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் பதிவு செய்யலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **189, நாள்.07.01.2021**
**தீர்மானம்**

*******

## பொருள் எண்.6

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் உள்ள 27 வார்டுகளிலிருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு தினந்தோறும் வீடு வீடாக சேகரிப்படும் மக்கும் குப்பைகளை நகராட்சியின் நுண்ணுயிர் கூடத்தில் (MCC) சேர்க்கப்பட்டு உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. அவ்வாறு மக்கும் திடக்கழிவுகளை சிறு துகள்களாக பல்வரைசர் மூலம் அறைத்து உரமாக்கும் பணியில் தூய்மைப் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அப்பொழுது நுண்ணுயிர் கூடத்தில் ஈக்கள் மற்றும் சிறிய பூச்சிகள் அதிகமாக வருவதாலும், அருகில் குடியிருக்கும் பொது மக்களிடமிருந்து வருகின்ற புகார்களை குறைக்க வேண்டியுள்ளதாலும், குறிப்பாக பணியில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு, அப்பகுதியினை மிகவும் தூய்மையாக வைத்திருக்க வேண்டிய அவசியம் உள்ளதால் 50 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **190, நாள்.07.01.2021**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.7

சின்னமனூர் பேரூராட்சி 01.04.1977 முதுல் 3—ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 1984 முதுல் 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து 2—ஆம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகராட்சி 25.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினை கொண்டுள்ளது. 2011ம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 42305 ஆகும். நகர் வாழ் பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் நகரிலிருந்து 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள வேம்படி களத்தில் கட்டப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்தில், பெரியாற்றின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து (Infiltration wells) நீர் சேகரம் செய்யும் கிணற்றுக்கு (Collection wells) கொண்டு வரப்பட்டு, 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கு நீர் சுத்திகரிக்கப்பட்டு, அங்கிருந்து சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கிருந்து நகர்வாழ் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் 40 குதிரை வேக மின் மோட்டார்கள் 3 எண்ணம், 30 குதிரை வேக மின் மோட்டார் 1 எண்ணம், நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 20 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம், 15 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம் மற்றும் 5 குதிரை வேக மின் மோட்டார் 1 எண்ணம் அமைக்கப்பட்டுள்ளதுடன், தலைமை நீரேற்று நிலையத்தில் நீர் உறிஞ்சு கிணறுகளில் 5 குதிரை வேக திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார்கள் 12 எண்ணம் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய 35 எண்ணம் பொதுக் குழாய்கள் (Public Fountation) அமைக்கப்பட்டுள்ளன.

நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவை தவிர்த்து பிற தேவைகளை பூர்த்தி செய்ய நகரில் 76 எண்ணம் மின் பவர் பம்ப் அமைக்கப்பட்டுள்ளதுடன், 121 எண்ணம் ஆழ்துனை கிணறுகள் (Hand Pump) அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 4.700 கிலோ மீட்டர்

நீளத்திற்கு பிரதானக் குழாய்களும், 34.900 கி.மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகப் பணி (Pumping Main and Distribution Main) அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு நாளது தேதியில் 2 மின் பணியாளர்கள் (Electrician) 1 குழாய் பொருத்துநர் மற்றும் 1 மதகு திறப்பாளர் (Turn Cock) பணியிடங்கள் மட்டுமே நடைமுறையில் உள்ளன. சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டிக்கும், குருக்கள் பள்ளித் தெருவில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும், வேம்படி களத்தில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்திற்கும் (Water Tank, FIlter Bed and Water Supply Head works) பகல் மற்றும் இரவு காவல் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லை. மேலும் குடிநீர் விநியோக பொதுக் குழாய்கள், ஆழ்துளை கிணறுகள், பிரதானக் குழாய்கள், பகிர்மானக் குழாய்கள், மினி பவர் பம்ப்கள் மற்றும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து சீரான குடிநீர் விநியோகம் நடைபெற போதுமான பணியாளர்கள் நகராட்சியில் நடைமுறையில் இல்லாததாலும், குடிநீர் விநியோக இடங்களில் பராமரிப்புப் பணிக்கு பணியாளர்கள் தேவைப்படுவதாலும், மின் மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை நிவர்த்தி செய்ய பணியாளர்கள் தேவைப்படுவதாலும், போதிய பணியாளர்கள் பணியிடம் நடைமுறையில் இல்லாததால், மேற்படி பணிகளை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மேற்படி ஒப்பந்தப்பணிக்கு வழங்கப்பட்ட தொகை ஜனவரி 2021 உடன் முடிவடைவதால் பிப்ரவரி 2021 முதல் மேற்படி பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9.90 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **191, நாள்.07.01.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனை கூட்டத்தில் பொது மக்களுக்கு அ).திடக்கழிவு மேலாண்மை தொடர்பான விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஆ).மழை மற்றும் குளிர் காலங்களில் கவனிக்க வேண்டியவைகள் குறித்த ஸ்டிக்கர்கள் இ).கொரோனா தொடர்பான விழப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஈ).டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் போன்றவற்றை அச்சிட்டு பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஸ்டிக்கர்களை விநியோக அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்கண்ட வகையான ஸ்டிக்கர்கள் தலா 5000 எண்ணம் வீதம் அச்சிட்டு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/–க்கு நிர்வாக அனுமதி பெற வேண்டி மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் பதிவு செய்யலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **192, நாள்.07.01.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பள்ளிகளில் 10 மற்றும் 12ம் வகுப்புகள் 19.01.2021ம் தேதி முதல் திறக்கப்படும் என அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள். மேற்படி அறிவிப்பின்படி கொரோனா தொற்று நடவடிக்கையாக சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் மாணவர்களுக்கு கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக பள்ளி வளாகங்கள் மற்றும் வகுப்பறைகளில் கிருமி நாசினியான லைசால் (Lysol) தெளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் அறிவுறுத்தலை தொடர்ந்து 2000 லிட்டர் (Lysol) வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.7,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0060/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **193, நாள்.07.01.2021**

**தீர்மானம்**

*******